# இந்தக் கணத்திலும் நீயே ஆள்கிறாய் அண்ணா!



நனைந்த சமூகத்தை
நீதான் பற்றவைத்தாய்;
இன்னும் அணையவில்லை
அந்த எரிதழல்

தமிழ்நாட்டு
அரசியல் அகராதியின் முதற்சொல்
அகரமல்ல; அண்ணா

இன்றைய அரசியல்வரை
உன் நெருப்பு இல்லாமல்
பருப்பு வேகாது

வாளால் சாதிக்கவேண்டியதை
வாழைத்தண்டு கொண்டு
சாதித்தவன் நீ!

இன்றைய
வலிமையோடு ஒப்பிட்டால்
உன் எளிமை அரசியல் அதிசயம்

எதையும்
அனுபவிக்காதவன் நீ

உன் நாத்திகத்தைவிட்டுத்
தமிழர்கள் நகர்ந்திருக்கலாம்;
கடவுள்கள் இன்னும்
தலைமறைவாய்த்தான் இருக்கிறார்கள்

தமிழர்களின் பெருநிகழ்வு
நீ பிறந்தது
துயர் நிகழ்வு
அறுபதில் நீ இறந்தது

தமிழன்
கொடுத்து வைக்காதவன்

நீ துய்த்ததெல்லாம்
கைதட்டல் என்ற
ஒலிப்பொருள் ஒன்றுதான்

டெல்லிக்கு நீ இன்னும்
கெட்ட கனவு
அதில் விழித்துக்கொண்டவர்களை
நீ மேலும் தூங்கவிடுவதில்லை



கவிப்பேரரசு
வைரமுத்து

## இந்தியாவின் தேசிய நூலாக திருக்குறளை அறிவிக்க வேண்டும்!

# 2026 தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வென்றிட உழைத்திடுவோம்!

## கழக இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!



சென்னை, செப். 16-

சென்னை அன்பகத்தில் 13.09.2025 அன்று சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் முதல்வர் கழகத் தலைவர் ஆணையின்படி இலக்கிய அணி கூட்டம் நடைபெற்றது. இத் தகவல் துணைப் பொதுச் செயலாளர் இலக்கிய அணி பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களின் ஒப்புதலும் பெறப் பட்டுள்ளது.

அதில் கீழ்க்கண்ட தீர்மான ங்கள் நிறைவேற்றப் பட்டன.

தமிழ்நாடு முதல்வர் நம் மாநிலத்தில் தொழிற்சாலைகள் தொடங்க ஏற்கனவே அமெரிக்கா, ஸ்பெயின், சிங்கப்பூர், ஐய்க்கிய அரபு நாடு, ஜப்பான் நாடுகளில் தொழில் முதலிடுகளை ஈர்த்த தோடு பத்து நாட்கள் ஜெர்மனி இங்கிலாந்து சென்று 15,516 கோடி முதலீடுகளையும் ஈர்த்து ஒசூர் சென்று 24,307 கோடிக்கான ஒப்பந்தங்களும் போட்டு வந்துள்ளார். இதனால் தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் 32.82 லட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை உருவாக்கிய தோடு 10.63 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளார் மேலும் 2030 ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் (85 லட்சம் கோடி) தமிழ்நாட்டை பொருளாதார மாநில மாக்கிட உழைத்து வரும் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களை கழக இலக்கிய அணி நன்றியுடன் வணங்குகிறது.

திட்டங்கள் தருவதில் நம் கழகத் தலைவர் முதல்வருக்கு நிகர் முதல்வர் தான் என்கிற அளவிற்கு மக்களுக்கு பயன் தரும் திட்டங்களைத் தந்து வருகிறார். இந்தியாவில் ஆளுகிற மாநில முதல்வர்களில் முன்னோடி முதல்வராக விளங்கும் தமிழ்நாடு முதல்வர் அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க உழைத்துக் கொண்டிருகிறார். ஒரு மாநில முதல்வர் அறிவித்த திட்டம் இந்தியாவில் பல மாநிலங்கள் பின்பற்றுவதோடு உலகின் கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளும் விரும்பி அமல்படுத்த உள்ள திட்டம் பச்சிளம் பாலகர்களின் பசிபோக்கும் காலை உணவுத் திட்டம். அத்திட்டத்தை தற்போது மேலும் விரிவுபடுத்தி பல லட்சம் மாணவ கண்மணிகள் பயனடைய செய்த தோடு கல்வி பயில சேர்க்கையிலும் முதன் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திய மனித நேயர் முதல்வர் அவர்களை கழக இலக்கிய அணி நன்றியுடன் பாராட்டி வணங்குகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் படிக்காத நூல் இல்லை எழுதாத எழுத்துஇல்லை என்கிற அளவிற்கு இலக்கியத்தை படித்து தமிழ் இலக்கிய உலகிற்கு பெருமை சேர்த்தவர். அதே போல் அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தும் அறிவின் அழகின் உச்சம். எனவே பதினைந்து நாட்களுக்கும் அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வரைந்த இலக்கியப் படைப்புகளை வைத்து கவிதைப் போட்டி நடத்தி வென்ற மாண மாணவியர் பட்டியலை தலைமை இலக்கிய அணிக்கு தருமாறு கழக இலக்கிய அணி அமைப்பாளர்களை கேட்டுக் கொள்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உழைப்பால் உயர்ந்தவர் சிந்தனையால் சிறந்தவர் பல. பிரதமர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். அப்படிப்பட்ட அறிவிற் சிறந்த கோமகனுக்கு பாரதரத்னா விருதை ஒன்றிய அரசு வழங்கிட வேண்டுமென்று கழக இலக்கிய அணி கேட்டுக் கொள்கிறது.

வர இருக்கிற சட்டமன்றத் தேர்தல் (2026) நமக்கு சவாலான தேர்தல். எதிர்க் கட்சிகள் பொய்களையும் புனைசுருட்டு களையும் தொடர்ந்து கட்டவிழ்த்து விடுகின்றன. எனவே அவைகளை முறியடிக்கும் வண்ணம் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் மாவட்ட, மாநகர, ஒன்றிய பகுதி இலக்கிய அணி நிர்வாகிகள் ஒவ்வொரு ஊர் ஊராக கிராமம், நகரம் என்று ஒவ்வரெரு வீடாகச் சென்று மக்களை அதிலும் குறிப்பாக மகளிர் மற்றும் மாணவியரைச் சந்தித்து முதல்வர் அவர்களின் சாதனைகளையும் கூறி திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்து ரைத்து திண்ணைப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்றும் மீண்டும் தமிழ்நாட்டில் பெரு ம்பான்மை அதாவது 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் கழகம் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை வெற்றிபெற செய்திட ஒய்வு தூக்கம் மறந்து உழைக்க வேண்டும் இலக்கிய சபதம் ஏற்கிறது.

ஒன்றிய பா.ஜ.க. மைனாரிட்டி அரசு தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் விதத்தில் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் நேரடியாகவும், கடிதம் எழுதியும் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியை பல முறை கோரியும் நிதியை வழங்க மறுத்து தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. இதற்காக ஒன்றிய பாஜக அரசை வன்மையாக கண்டிப்பதோடு அமர்நாத் அவர்கள் கீழடி ஆய்வையும் கிடைத்த அரிய தகவல்களையும் தந்து கீழடி நாகரிகம் தமிழர் நகரித்தின் வெளிப்பாடாக உள்ளதையும் உலகின் மூத்த நாகரிகம் தமிழர் நாகரிகம் என்பதை அறிக்கையாக கொடுத்ததை ஏற்க மறுத்து ஒன்றிய அரசு முரண்டு பிடிக்கிறது. ஒன்றிய அரசு உடனடியாக கீழடி ஆய்வு அறிக்கையை அங்கிகரித்து ஏற்றுக் கொண்டு அறிவிக்க வேண்டுமென்றும் அமர்நாத் அவர்கள் இடம் மாற்றம் செய்து கீழடி ஆய்வை தொடர செய்ய ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கழக இலக்கிய அணி வலியுறுத்துகிறது.

தமிழ் மூத்த மொழி என்றும் ஐ.நாவில் பேசும் போது கூட்ட திருக்குறளை மேற்கோள் காட்டி பிரதமர் மோடி பேசி வருகிறார். எனவே பிரதமர் மோடி அவர்களுக்கு தமிழ்மொழி மீது அக்கறையும், பாசமும் இருக்குமானால் இந்தியாவின் தேசிய நூலாக திருக்குறளை அறிவிக்க வேண்டும் என கழக இலக்கிய அணி ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறது.

இந்நிகழ்வில் இலக்கிய அணித் தலைவர் அன்வர் ராஜா, இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன், நந்தனம் நம்பிராஜன் மற்றும் நா.சந்திரபாபு, திராவிட மணி, இறைவன், பிரம்மபுரம் பழனி, கலைச் செல்வம், பெருநாழி போஸ், நாகநாதன், ஸ்ரீதர், செந்தில் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக சகாய அரசு கன்னியாகுமரி அமைப்பாளர் நன்றி கூறினார்.



கழகத் தலைவர், முதல்வர் தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டம் உதகை சட்டமன்ற தொகுதி இத்தலார் ஊராட்சிக்குட்பட்ட இத்தலார் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமினை, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் அரசு துறை அதிகாரிகள், உதகை தெற்கு ஒன்றியம் மேற்கு பகுதி செயலாளர் ஜெகதீஷ் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# உன் இலட்சியம் காப்போம்! அண்ணா!

புவிப்பரப்பில் சிறந்தவனே! சின்னக் காஞ்சி
புரத்தினிலே பிறந்தவனே! தமிழாய் பொங்கிச்
செவிப்பரப்பில் புகுந்தவனே! உலக மக்கள்
சிரம்வணங்கத் தகுந்தவனே! உரிமை வேட்கைத்
தவிப்படங்கத் “தமிழ்நாடு” பெயரைச் சூட்டித்
தலைநிமிர வைத்தவனே! சங்க காலக்
கவிப்புலவர் வரிகளைப்போல் தமிழர் நெஞ்சில்
கல்வெட்டாய் நிலைத்தவனே! எங்கள் அண்ணா!

மாடமணி மாளிகையின் மலர்மெத் தைமேல்
மஞ்சம்போட் டிருந்தஅர சியலை, நித்தம்
பாடுபடும் ஏழையர்தம் குடிசைக் குள்ளும்
பவனிவரச் செய்தவனே! பரண்மேல் வைத்த
ஏடுகளில் துயில்கொண்ட தமிழைத் தட்டி
எழுப்பியஎம் கோமானே! எட்டுத் திக்கும்
மேடைகளில் எதிரொலித்த விடியற் பாட்டே!
“மேதை” எனும் சொல்லுக்கோர் எடுத்துக் காட்டே!

“பங்காரு, நடராசர்” தமிழன் னைக்குப்
படையலிட்ட அறிவமுதே! பாசத் தேனே!
பொங்கார்வத் தம்பியர்க்குக் களத்தில் கூட
“பொறுமை”சொல்லித் தந்தவனே! மகர யாழில்
சங்கீதம் மீட்டதுபோல், சொற்பெ ருக்கில்
சந்தமழை பொழிந்தவனே! சரித்தி ரத்தின்
சிங்காத னத்தில்எம்மை அமர வைத்துச்
சென்றவன்நீ! ஆரியத்தை வென்ற வன்நீ!


வம்புக்கு வந்தாரைத் தன்வா தத்தால்
வசமாக்கிப் போட்டவனே! வடஆ திக்கக்
கம்பிக்குள் சிறைப்பட்ட மொழியை, நாட்டைக்
காப்பாற்றி மீட்டவனே! தினம்வி ழித்துத்
தம்பிக்கு நீவரைந்த கடித மெல்லாம்
தமிழுக்குக் கருவூலம் அன்றோ! எங்கள்
நம்பிக்கைச் சூரியன்நீ உதிக்கா விட்டால்
நாடேது? தமிழர்க்கு நாதி ஏது?

மாற்றலரை யும்கவர்ந்த மகத்து வம்நீ!
மனிதத்தின் புனிதம்நீ! வளம்குன் றாமல்
ஊற்றெடுத்த கற்பனையின் உறைவி டம்நீ!
உவமைகளின் கொள்ளிடம்நீ! புகழ்ப்பொன் னேட்டில்
காற்றடித்துச் சாயாத இமய மும்நீ!
காவியம்நீ! ஓவியம்நீ! காலத் தாயின்
நோற்றவத்தால் வந்துதித்த தவம கன்நீ!
நூற்றுக்கோர் ஊழிக்குப் பிறப்ப வன்நீ!

அண்ணா!நின் உரையில், தீ பரவச் செய்தாய்!
ஆயினும்அத் “தீ”பிறரை எரிக்க வில்லை!
கண்ணீரில் எழுதுகோல் நனைத்தே, ஈரக்
கதைபுனைந்தாய்! எனினும்அது கரிக்க வில்லை!
மண்மீதில் இறுதிஊர் வலம்உ னக்கு!
மழலைகளும் அன்றைக்குச் சிரிக்க வில்லை!
விண்ணே! நீ புதைந்துவிட்டாய் எனும்துன் பத்தை
விழுங்கிவிட்டோம்! அதுஇன்னும் செரிக்க வில்லை!

கடலலையின் தாலாட்டில், உப்புக் காற்றில்
கண்ணுறங்கும் அண்ணா!நின் பிறந்த நாளில்,
உடன்பிறப்புக் கூட்டத்தை விழித்துப் பார்நீ!
உணர்வலைகள் ததும்பியெழும் உற்சா கம்பார்!
அடல்மறவர்! ஆம், உன்றன் ஆசி பெற்ற
அன்புமகன் “தளபதி” இந் நாட்டுக் காகக்
கொடைவழங்கும் உழைப்பைப்பார்! ஒய்வில் லாத
கொள்கைநெடும் பயணத்தின் வெற்றி யைப்பார்!

நீதிபதி ஆசனத்தில் அமர்ந்தி ருக்கும்
“நேற்றையநம் சுப்பனைப்பார்! குப்ப னை”ப்பார்!
சாதிமதப் பேதமின்றிச் சண்டை யின்றிச்
“சமத்துவ புரங்கள்”எங்கும் மலர்வ தைப்பார்!
ஆதிமொழித் தமிழேஎம் உயிர் மூச் சென்றே
அறிவித்த ஆக்கம்பார்! தொன்று தொட்ட
வேதனையின் இருளனைத்தும் விலகி, இன்று
விவசாயி விழியில், ஒளி வெள்ளத் தைப்பார்!



ஆண்டவனுக் கருகில்போய் கருவ றைக்குள்
அர்ச்சகராய் நிற்கும்அந்த இளைஞ னைப்பார்!
பூண்டெழுந்த சபதத்தால் சிற்றூர் தோறும்
பொறியாளர், மருத்துவர்தம் “புதுமு கம்”பார்!
ஆண்டுதொறும், திங்கள்தொறும், கிழமை தோறும்
அல்ல!அல்ல! நாள்தொறும்ஓர் வளர்ச்சி யைப்பார்!
மீண்டும்இந்தத் தமிழகத்தைச் சுற்றிப் பார்நீ!
மீட்சிபெற்ற தாயகத்தின் மாட்சி யைப்பார்!

“ படியரிசித் திட்டம்”என் றுரைத்தாய்! இன்று
பசியாறி மனம்குளிரும் மக்க ளைப்பார்!
குடல்கருகும் வறுமைஎன்றாய்! அடடா, பள்ளிக்
கூடத்தில் காலைஉணவு அளிப்ப தைப்பார்!
வடபுலம்தான் வாழ்கிறதென் றுரைத்தாய்! தெற்கும்
வளர்கிறதே! இன்றந்த வனப்பை நீ பார்!
“கடமையிலே தவறாத முதல்வர்” என்றே
கைகூப்பி எழும், மக்கள் களிப்பி னைப்பார்!


“ஒப்பாரும் மிக்காரும் இலாத வண்ணம்
உயர்வாய்நீ! “ என்றுரைத்த உன்ன தம்பார்!
“அப்பாவைப் போலபிடி வாதக் காரன்!
அரிமாவை நிகர்இளைஞன்! “ என்றுன் நாவால்
எப்போதோ நீயுரைத்த இளைஞ னைப்பார்!
இன்றைக்கு “மாண்புமிகு முதல்வர்” ஆகித்
தப்பாமல் தொண்டுசெய்யும் உறுதி யைப்பார்!
“ தலைவன்”என்றே நிமிர்ந்துநிற்கும் தகுதி யைப்பார்!

மடிமீதில் தூக்கிவைத்துக் கொஞ்சும் போதில்
“வருங்காலம் உன்காலம்” எனும்நின் வாழ்த்துப்
படியேபே ராற்றலினால் ஆட்சி செய்யும்
பக்குவம்பார்! “ தளபதி”நற் பண்பி னைப்பார்!
இடிதாங்கி போல்நின்றே இயக்கம் காக்கும்
இனமானத் தொண்டர்களின் இன்மு கம்பார்!
கொடிதாங்கி “முப்பெரும் விழாவில்” வீரர்
கூட்டம்வந்தே “கரூர்”நோக்கிக் குவிந்தி டும்பார்!

கயலோடு, புலி,வில்லைக் கொடியில் தாங்கிக்
“கலைஞர்” அன்று புறப்பட்ட பயணம், இன்று
செயலாக்கம் பெற்றதண்ணா! “சமூக நீதி”
திசைதோறும் ஊடுருவும் செய்தி கேட்டே
உயிர், உள்ளம் சிலிர்த்திடநீ எம்மோ டில்லை!
உன்மீதில் ஆணை!இதோ கலைஞர் பிள்ளை!
புயல்வேகத் “தளபதி”யின் சேனை! ஆவி
போயினும்உன் இலட்சியத்தைக் காப்போம்! அண்ணா!



... கவிச்சுடர்.
கவிதைப்பித்தன்



சேலம் மத்திய மாவட்டதி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 117 வது பிறந்த தினத்தையொட்டி மாவட்ட கழக செயலாளர், அமைச்சர், இரா இராஜேந்திரன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே. சுபாசு, மு. கார்த்திகேயன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், கே.டி.மணி.தாமரைக்கண்ணன், மேயர் ஆராமச்சந்திரன். மாநகர நிர்வாகிகள் பா. ரகுபதி, கே.ஆர். முருகன், பொதுக்குழு உறுப்பினர்கள் சா சுப்பிரமணி, சந்திரன், அசோகன், லோகநாதன் பூபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண் பிரசன்னா, மாநகர அமைப்பாளர். கேபிள் சரவணன், மாநில தொண்டர் அணி துணைச்செயலாளர் பகோமான், பகுதி செயலாளர்கள். பன்னீர் செல்வம், கேபிள் ராஜா, கே.டி. ஆர். தனசேகரன், ஜெய், ஏ.எஸ். சரவணன். இப்ராகீம், சி பிரகாஷ், சாந்த மூர்த்தி, மணமேடு மோகன், ஜெகதீஷ் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.